பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபியுல்லாபேரில் முன்னோர்கள் பாடிய

# காஸீம் மாலையும்,

# இமாம் காஸீம் படைப்போரும்,

முத்துப்பேட்டை,

முஹியித்தீன் பக்கீர் புலவரவர்கள் பாடிய

## தௌஹீதுப்பதமும்,

விதியை மதிதான் வெல்லுமோ என்ற பதமும்,

அடங்கியிருக்கின்றன.

இவை காயற்பட்டணம்,

கண்ணஹ்மது மகுதூமுஹம்மதுப் புலவர்

அவர்களால் பரிசோதித்து அச்சிட்ட

பிரதிக்கிணங்க

சென்னை - இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்.

இதன் விலை] 1946. [அணா 4.

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

இஃது

முன்னோர்கள் பாடிய

# காஸீம் மாலை

### காப்பு வெண்பா

கத்தாவை யோதிக் கருத்தினுறவே நினைத்து
வித்தாரமான விரிகடலா—முத்தாரம்
வீசுமாலைப் புயஞ்சேர் வேதாம்பரைப் பாடுங்
காஸீ மாலைக் கிறயே காப்பு.

### கட்டளைக் கலித்துறை

சீர்கொண்ட மேனியு மாறுத செல்வச் சிறப்பழகுங்
கார்கொண்டமேகக் குடையு மெய்ஞ்ஞானக் கருத்துங்கண்டு [ம்
நேர்கொண்டசொர்க்கத்தினென்நாளுஞ் செம்பொனிறைந்திலங்கு
வார்கொண்ட கொங்கை மடவார்கள் போற்று முஹம்மதுவே. 1

அருந்திற லண்ண லபூபக்கர் நீதி யடலுமறு
பெருந்திறல் வேதத்துதுமா னலிப்புலி பேசுஞ்சிங்கம்
பொருந்திறல் வீரத் தஸனுஸை னூரும் போற்றும் வல்ல
வருந்திறல் வீரமு மாண்மையு முள்ள முஹம்மதுவே. 2

குருபாத மாமலர் மண்மேற் படாமற் குதாவருளாற்
செருப்போ புறுசினி லேறிச்சென் றேசிந்தை கூறவந்து
கருப்பா றுபாய விளையுஞ் செஞ்சாலிக் கரைமுழுது
மறுப்பாறு பாயுந் தடமக்கம் வாழு முஹம்மதுவே. 3

பூரித் தடவயற் சங்கீன்ற முத்துப் புனைந்தகதிர்
பாரித்திலங்க நிலவுக் கொப்ப யதைப் பார்த்துவரால்
வேரிக் கமுகி னிளம்பாளை சிந்த வெகுண்டெழுந்து
வாரிப் பகடு குதிபாயு மக்க முஹம்மதுவே. 4

சிங்கத்தின் சிங்கப் புலியலி யாருந் திசைகளுள்ள
சங்கைக் குழாமதுந் தார்ப்படை வீரருந் தானெருங்க
வெங்கட் கருடக் கல்யாண வாசலின் வீசுகடல்
வங்கத்திலேறிமன் சக்கூனை வென்ற முஹம்மதுவே. 5

ஆணிக் கனகத் தவங்கார மாகவி மைந்தொகுத்தும்
பேணித் தொழுது நெறியாக வேபெரும் பூதலத்திற்
பூணிக்க வாழ்ந்து ஸலவாத்தை யோதிப் புகழ்ந்தவர்க்கு
மாணிக்க மேமுத்து மக்காவில் வாழு முஹம்மதுவே. 6

சேரமன் மீறுங் குபிர்காட்டை வெட்டித் திறுக்கறுத்துப்
பாராமன் மிக்க துனியாவின் வாழ்வைப் பற்றறுத்துப்
பேராமல் வானின் மிஃறாஜுக் கேகையிற் பின்வருங்கல்
வாராம னில்லெனக் கையா லமர்த்து முஹம்மதுவே. 7

பாய்நீரைக் கொண்ட திரைகடற்போன்ற படையினின்று
மானீ ரெனச்சொரி யுங்கரு தார்களின் வாளிபட்டுச்
சேய்நீர் வடித்தவர்க் கேமறை யோதிடுஞ் செய்யதிரு
வாய்நீரைக் கொண்டு விதனத்தைத் தீர்த்த முஹம்மதுவே. 8

கொதிக்கின்ற வெஞ்சுரப் பாலையி லாறு குளிர்ந்துவர
விதிக்கின்ற நாயன் றன்னரு ளாலும் விளம்பியருள்
பதிக்கின்ற நம்பிஸ் லாமுக் கெலாம்படத் தீபமென்ன
மதிக்கின்ற நற்ஷபா அத்தருள் கொண்ட முஹம்மதுவே. 9

சதிவட்ட மாவை ரெந்நாளுமஞ்சியுந் தத்தளிக்க
மிதிவட்ட வரம்பரி யேறிவந் தோர்களு மேன்மை சொலப்
பதிவட்ட முற்றிடுஞ் சூதரு மேபலர் பார்த்து நிற்க
மதிவட்ட மேயழைத் தேமக்கம் வாழு முஹம்மதுவே. 10

அல்லூரும் பொய்யரை நெஞ்சார புஜஹி லன்றுசொன்ன
சொல்லூர வன்றிறை யோன்றனைப் போற்றித் துவாவிரந்து
கல்லூரவே திருக் கைகாட்டி நில்லென்ற காரணத்தின்
மல்லூருந் தின்புயத் தீர்மக்கம் வாழு முஹம்மதுவே. 11

கத்தர் வருட்கொடு காகாவுக் கேகவக் கடிநகரி
னூற்று டரவைத் தடித்துவந் தோருண்மை யோடு நெஞ்சஞ்
சற்று கிலும்பிச கில்லாது தீனிற் றரித்தவர்க்கு
வற்றாத மாசெல்வ மேமக்கம் வாழு முஹம்மதுவே. 12

அன்றேறி ஞர்கதி ஜாமன மேவண்ண மதுமுடிக்க
வென்ற மனதி னினைந்தவப் போதிறை யோன்விடுத்த
குன்றே பசும்பொன் பரஞ்சியே வெள்ளிக் குன்றுவந்தார்
மன்றே திருநகர் மக்காவில் வாழு முஹம்மதுவே. 13

ஆம்பரி வேடை மில்லாமுக் கெலாமட லேபொருந்தும்
பாம்பரி தன்னின் பய நீக்கியே யிந்தப் பூரதனின்
வேம்பரி வேங்கை மதவேடர் காட்டில் விரும்பி நின்ற
வாம்பரி யோரே பேசிடு மக்க முஹம்மதுவே. 14

சந்தண மேடையும் பொன்னூசல் வீதியுந் தாவிகறுங்
கொந்தலர் மேவும் பரிமளக் காவுங் குதாயருளா
லந்தர வானவ ரெல்லோருங் கூடி யணிபணியு
மந்தர வாவிகள் சூழ்மக்கம் வாழு முஹம்மதுவே. 15

கதிக்குஞ்சுடர் வல்லயத் தளவாகிக் கதிர்முடிகிக்
கொதிக்கின்ற செம்புத் தரையானபோது குதறத்தினு
லுதிக்கின்ற மந்தாரைக் கேள்விகள் கேட்டு முறுக்கையிலே
மதிக்குஞ் ஷபாஅத் தருள்செய்ய மக்க முஹம்மதுவே. 16

ஏயும் புலியினறிதாளர் போற்ற விகத்தினிற்செந்
நாயு முடும்பும் பேசிடப் பேசுநல் வேதங்களுந்
தோயுங் கிருபை யுடையோனைப் போற்றித்து வாளிரந்து
மாயுங் குபிரை நீக்கிடு மக்க முஹம்மதுவே. 17

சுறுமா விழிக்கிட்டுக் கையா லபம்போற்றிச் சோதியென்றென்
றுறுமா நிலத்திற் பிறந்துவந் தேருடை யோனருளா
லறுமா மொழிசொல்லி யஸ்ஹாபிகள் வேட்ட வறிவுக்கெலா
மறுவா மொழிசொல்லி மக்காவில் வாழு முஹம்மதுவே. 18

விண்மீ திலங்கு சுவர்க்கத்தின் மாதர் விரும்புமலர்க்
கண்மீ திலங்கு மணிச்சுட ரேகன காலியத்தின்
பண்மீ திலங்குப் பாக்கியமே பசும்பொன்னெனவே
மண்மீ திலங்கு மறையோது மக்க முஹம்மதுவே. 19

சவுத்தான சத்த மிறையவனால் வரச் சத்திரத்தின்
மவுத்தாய்க் கிடக்கின்ற மையத்தைக் கூப்பிட்டு வம்மெனவே
பவுத்தாகச் சென்ற வஸ்ஹாபிகள் காணப் பகர்விருந்தின்
மவுத்தான பிள்ளையைக் கூட்டிப் புசித்த முஹம்மதுவே. 20

ஆட்டெலும் பானதை யாடாக்கும் வல்லவற் றரசர்கரப்
பூட்டெலும் பான தொடைந்தே முறிந்திடப் பொருதுவென்று
கோட்டெலும் பாக்கு மெல்லோருங் காணக் குதாயருளான்.
மாட்டெலும் பானதை மாடாக்கு மக்க முஹம்மதுவே. 21

நித்திரை யோசைத் தடஞ்சூழு மக்கத்தி னூட்டைவைத்த
புத்துரை போகப் பொடியாக்கி விட்டவிப் பூதலத்தி
னத்திரை வீரா பணிந்தேத்து வீர வாதியருண்
முத்திரைமேவுந் திருத்தோ ளிலங்கு முஹம்மதுவே. 22

நீறிட்ட தீயை நெடுங்கால மாகவிந் நீணிலத்திற்
கூறிட்ட மாக வணங்கிய காபிர்கள் கூசவத்தீர்
சீறிட்ட கோபமு மாறாத வெப்பமுந் தேய்ந்துகெட்டு
மாறிட்ட மாகிய மக்காவில் வாழு முஹம்மதுவே. 23

அட்டான கோதும்பை யுண்டான மட்டுமைந் நாழிகொண்டு
மூட்டாம லாயிரம் பேர்க் கேயசன மொழிந்தளித்த
செட்டா னவையொன்று பத்தாய்ப் பெருகிடுஞ் செங்கமல
மட்டாரும் வாவிகள் சூழ்மக்கம் வாழு முஹம்மதுவே. 24

வரம்வந்து சேரு முடையான் மகிழ்ந்து வரவிடுத்த
துரம்வந்த தூதர் ஜிபுரீலுஞ் சொல்லத் துவாவிரந்த
சுரம் வந்த கானி லறவே பெருகிச் சுரந்தடப்பின்
மரம்வந்து சூழ்ந்திடச் சுத்த முண்டாக்கு முஹம்மதுவே. 25

எல்லாப் படைப்புக்கு முன்னாகி வல்லப மெண்ண வொண்ணான்
சொல்லாரு நன்னபி மாருக்கெலாம் பின்னர் தோற்றித் துன்யாப்
பொல்லாக் குபிரரைச் சேரவொட் டாமற் பொருதுவென்று
வல்லாதி வல்ல புகழ்வீர மோங்கு முஹம்மதுவே. 26

அருந்தாத நாய னளவி லெந்நாளு மனமகிழ்ந்து
பொருந்தாத பேரும் பொருந்திட வேபுக ழேநடத்தி
திருந்தாக் குயிர் நிலை யெல்லா மொழிந்திடச் செய்துமொழி
வருந்தாத வூமையைப் பேசிடச் செய்த முஹம்மதுவே. 27

உரம்வந்து கிட்டப் பரியேறி வந்திடும் ஒக்கவொன்னார்
சிரம்வந்து கிட்ட வடிவாட்கை பூட்டுந் தென்றலிலாச்
சுரம்வந்து கிட்டத் தண்ணீ ரழைத்தொல்லை சூழ்வனத்தில்
வரம் வந்து கிட்டச் செய்திடு மக்க முஹம்மதுவே. 28

திண்டாடு மன்ன ரணிசாய வோர்பிடிச் செங்கைமண்ணுற்
கொண்டாட வம்ப ரிருந்தோடச் செய்துநற் கொந்தலருந்
தண்டா மரையி னன்னங்க ளாருந் தடாகங்களும்
வண்டாடுஞ் சோலையுஞ் சூழ்மக்கம் வாழு முஹம்மதுவே. 29

கரங்கொண்ட வேலின் வீசிடக் கூடும் கடும்பகைய
ருரங்கொண்ட வீட்டிற் புகழ்வீசக் காட்டி யுறவிருந்தார்
வரங்கொண்ட நாய னுதவி யாதாலு மகிழ்ந்துலர்ந்த
மரங்கொண்டு நட்டிப் பழந்தந்த மக்க முஹம்மதுவே. 30

முன்னுளிலே யொரு காபிருக் காகமுன்வைத்தபுத்தோர்
டென்னு தரவுகள் பேசிடென் ருேதிவிறை யோனருளா
லெந்நாளுங் காத மணக்குங் கஸ்தூரி யிலங்கமுடன்
மன்னு வெனச்சொல் மக்காவில் வாழு முஹம்மதுவே. 31

ஒண்டுப மிட்டு மலரிட்டுக் காபிர்க ளுருகியற்ற
கண்டுவ நின்று வணங்கிடும் புத்துக் கவிழ்ந்துவிழப்
பண்டுவே வேத முழங்கிடு செங்கட் பருவயிற்றின்
மண்டுகே வாவி புடைசூழ மக்க முஹம்மதுவே. 32

பொன்கண்ட பூமிப் புகழநினை யாதுறு புத்தியெல்லாங்
கொன்கண்ட நாயன் கிருபையி னுனிதங் கொடுக்கநல்கு
மின்கண்ட கீர்த்தி யுலகேழும் போற்றி விளங்குசெங்கண்
முன்கண்ட தூரம் பின்கண்டு வாழு முகம்மதுவே. 33

செட்டகஞ் செய்ய முன்பாதை போதையிற் சிந்தைகைந்தே
முட்டகஞ் செய்யு மபுஜஹில் மார்பினின் மோதியிடி
யொட்டகை மேனின்று கீழ்விழுந்தாட்டு முடையோனருளான்
மட்டக வாவி புடைசூழு மக்க முஹம்மதுவே. 34

துயிலும் பொழுது நடக்கின்ற காரியந் தோற்றுமுண்மை
பயிலும் வீதியவ னிடுகின்ற கட்டளைப் படிப்பிசகா
தயிலுஞ் சுடரெக்கீன் மீதே மறைக்கனி யழகுதரு
மயிலுந் துதிசெயு மயிலாகி வாழு முஹம்மதுவே. 35

பறக்கின்றன பட்சிடைக் கொன்றிடுங் காபிர்கள் பார்த்து நிற்கச்
சுறுக்கென்றதனை யெழுப்பிவிட்டு டேமிகு தூபபுகழ்
பிறக்கின்ற தீன்பயி ருண்டாக்கி மாபெரி யோனைநிதம்
பறக்கின்ற தூங்கிட யாமக்கம் வாழு முஹம்மதுவே. 36

போய்விட்ட ஞானத் திறத்தினர் யாரும் புகழ்ந்துமிற்க
மெய்விட்ட மாகப் பிறந்துவந்தே யிந்த மேதினியிற்
கைவிட்ட வேலின் குபிரோரை வெட்டிக் கறுவறுத்து
மைவிட்ட சோலை சூழ்மக்க வாழு முஹம்மதுவே. 37

செஞ்சிற் பழுதொன் றணுகவிடாம லிறுத்தியென்று
மஞ்சிக் குடையிடவந்து விநோத மகிழ்ச்சிபெற
நஞ்சுக்கறியை யமுதாக்கித் தின்று நலந்திகழும்
வஞ்சிக் கிழவியைக் கன்னிகை யாக்கு முஹம்மதுவே. 38

பாயும் புலியுந் திருநாமஞ் சொல்லிப் பயணமென்று
காயுஞ் சுடர்வழி யெல்லாங் கடந்து கருத்தினுற்றத்
தோயுங் கிருபையுடன்போக வங்கு துவாவிரந்து
மாயுங்குபிறை நெருங்காம லோட்டு முஹம்மதுவே. 39

சொர்க்கத்தி லாவஸியா மரியாவையுந் துதிமனஞ் செய்
தொக்கச் சுகித்துத் தீனவர் யார்க்கு முடையோனருளாற்
பக்கத் திருத்தி விருந்தீயும் போதெனைப் பாத்திரங்கு
மக்கத்தி லேயர சாண்டிடு மெங்கள் முஹம்மதுவே. 40

முன்னோர்கள் பாடிய

காஸீம் மாலை முற்றிற்று.

———

பிஸ்மில்லா ஹிர்றஹ்மானிர்றஹீம்.

இஃது

முன்னோர்கள் பாடிய

# காஸீம் படைப்போர்.

## காப்பு.

### அறுசீரடி யாசிரிய விருத்தம்.

தாரணி வான மெல்லாம் ஸமதாக நிரம்பி நின்ற
காரணன் தூதரான ஹபீபுல்லா மருக ரான
நேரணி யலியார் மைந்தர் நிறைந்த கண்மணியாய் வந்த
சீரணி யஸனர் பாலர் செய்படைப் போரைச் சொல்வோம். 1

மாநகர் மதீனத் துற்ற முஹம்மது நபியுல் லாதன்
தீனினைச் சேர்ந்த மன்னர் ஷெய்கு மீறான் சீர் மைந்தர்
தேனினு மினிமை யார்ந்த செவ்விய மொழியே செப்பும்
மானமார் ஷெய்கிபு றுஹீம் வள்ளலிவ் வுரைதந் தாரால். 2

உரைதர வின்பமாக வுலகுள்ளோ ரறிய வேண்டித்
தரைபுகழ் காஸீம் போரென் றிதற்கொரு பெயர் கொடுத்து
விரைமலர் போன்ற பாடல் விரும்பியே புகழ்ந்து நாயேம்
பரிவுடனுவி லோதப் படைத்தவா காப்பு நீயே. 3

## கடவுள் துதி.

### கண்ணிகள்.

ஆலம்படைத்தவனே புகழாளும் றஹ்மானே
காலமு முள்ளவனே கிருபையாய்க் காத்தரு ளாண்டவனே. 4

வள்ளல் முஹம்மதொடு அவர்கள் வரிசையாய் நால்வரையும்
உள்ளகத் தேயிருத்தி அனுதினம் ஓதிப் புகழ்ந்திடுவேன். 5

ஆதியருள் தூதர் மருக ரான அலியார் தம்
தெருசைனுடனே எல்லோரும் நிறைந்தார் கறுபலாவில். 6

அண்டர் புகழ்ந்தேற்றும் ஹுசைனா ரங்கே யிருக்கையிலே
வண்ட னெஸீது படைசுற்றி வந்து வளைந்ததுவே. 7

அந்தச் சமயத்திலே அலி அக்ப ராக்ரமத் தோடெழுந்து
முந்திய போர்செய்யவே ஒருவன் முன்னிதாய் வெட்டிவிட்டான்.

காஸீம் மனமுருகி அவரிரு கண்கள் நெருப்பெரியப்
பேசி மிகவிரங்கி உயர்ந்த பெரியோன் விதியென்றெண்ணி. 9

ஆல நபிகிளையில் நாமெல்லாம் அவர்களின் கோத்திரத்தில்
காலகொடுமையினால் நமக்கிந்தக் காரணம் வந்ததென்றே. 10

தன்னுட னேபிறந்தே அலி அக்பர் ஷஹிதாய்க் கிடப்பதனை
மன்னரப் துல்காஸீம் அவர்கள் கண்ணினிற் கண்டெழுந்து. 11

நொந்து படைக்களம்போய் அவரை நொடியி லெடுத்துவந்து
அந்தக் கறுபலாவில் அனைவருங் கட்டி யடக்கினரே. 12

அங்கோரத்திற் காஸீம் விரும்பி ஆண்டவனைப் புகழ்ந்து
முன்னர் வளைந்துகொண்டபடைக்கு மூர்க்கமாய்ப்போகவென்றே

சிங்கப் புலியலியார் தமது செல்வ ருஸைநயினார்
பங்கய மாமுகத்தின் முன்னில்வந்து பாதம் பணிந்து சொல்வார்.

எந்தன் தகப்பனுடன் பிறந்த வெழிலுறுந் தந்தையரே
வந்த படையை வெல்ல விடைதந்து வாழ்த்தி யனுப்புமென்றார்.

அந்த மொழிகேட்டு ஹுஸைனார் அல்லா தனைப்புகழ்ந்து
சிந்தை மிகக்கலங்கிக் காஸீமுக்குச் சீராய் நவிலலுற்றார். 16

கங்க முடிசூடும் எந்தன் தமையனா ரீன்றகண்ணே
எங்கள் குலக்கொழுந்தே விடை தராது எந்த விதம். 17

உந்தனை யீன்றெடுத்த ஹஸனா ரொஸியத்துச் செய்தபடி
வந்த மகனாரே உமக்கு மணக்கோலஞ் செய்யவேணும். 18

மின்ன விளங்கொடியாள் பீவி பாத்திமா பேரரசி
கன்னிக் குலக்கொழுந்தை உமக்குக் கலியாணஞ் செய்யவேணும்.

என்றங் ஹுஸைனார்சொல்ல காஸிமுக் கெல்லோருந் தான்கூடி
அன்று மனமகிழ்வாய்க் கறுபலாவி லன்பாய் மணமுடித்தார். 20

நிக்கா ஹதின் கடனும் சடங்கும் நிறைவேறி யானதின்பின்
தக்க வெழுந்துஸைனார் வண்ணத். தாமரைத் தாள்பணிந்தார். 21

கத்த னறுஷிப்புலி அலியார் கருணை மகனாரே
அந்தன் பரஞ்சாட்டி விடைதனைத் தந்தங் கனுப்புமென்றார். 22

என்னிரு கண்மணியே மகனே பெங்கள் குலக்கொழுந்தே
பொன்னின்மகனாரே உனைப்பெற்ற பூவைக்குச்சொல்லுமென்றார்.

தாயார் மனைபுகுந்தே அவர்கள் சரண மடிபணிந்து
மாய னெவஸீதை வெல்ல எனக்கு வாழ்த்தி விடைகொடுப்பீர். 24

பத்துமாதஞ்சுமந்து மகனே பெற்ற இளம்வயிறு
பற்றுதே யென்மகனே நீ சொன்னது சற்றுலு மாறுதே. 25

சித்தங் கலங்கிரதே உடலெங்குஞ் சேர மயங்குகின்றதே
பற்றி யெறிகின்றதே மகனே பெற்ற வயிறெனக்கு. 26

எண்ணாது மெண்ணுறதேமகனே யென் னெஞ்சங் கலங்கிறதே
உண்ணாலும் பாலமிர்தம் எனக்கு உபயோகமில்லை கண்ணே. 27

இந்தப் படியுரைக்கக் காஸீமவ ரென்னம்மா என்தாயே
சிந்தை கலங்காதே இறைவன் செயலல்லா லாவதுண்டோ. 28

பெண்கட் கரசியரே சுமந்தெனைப் பெற்ற விளமயிலே
பங்கனெ வஸீதைவெல்ல வென்றன் முகம்பார்த்து விடைதருவீர்

மாவியாதம் மகனாய்ப்பிறந்த வஞ்ச னெவஸீதுபடை
பாவியோரை வெல்ல வெனக்குப் பண்பாய் விடைதருவீர். 30

பார்த்து மனமகிழ்ந்து உங்களின் பாரச் சலிப்பகற்றி
ஏத்தி விடைகொடுத்துப் போய்வர எழிலா யனுப்புமம்மா. 31

பாத்திமத் துஸ்ஸுஹறா அந்தகாத்தூனே ஜென்னத்தின்மேல்
பாத்திஹா நீரோதிப் போய்வர வாழ்த்தி யனுப்புமம்மா. 32

ஹாஷீம் கிளைதழைக்க துனியா ஆலமெல் லாம்வளர
வாசியில் காவிமேறிப் போய்வர வல்லோனே காத்தருள்வாய். 33

பாலரப் துல்காஸீம் செய்தமணக் கோல மழியாமல்
பாளயம் போறதினால் அல்லாஹு ம்ம ஏழையைக்காத்தருள்வாய். ३४

ஆதி யிறைவனே புவியெங்கும் ஆளும் றஹ்மானே
நீதரப் துல்காஸீம் தன்னையே நித்தமுங் காத்தருள்வாய். 35

என்றங் கிறையிடத்திற் கையை யேந்தி துஆகேட்டு
நன்று மகனாரே படைக்குப்போய் நன்மையாய் வாருமென்றார். 36

பாதந் தனைத்தொழுது விடைவாங்கிப் பாங்கா யெழுந்திருந்து
நீதரப்துல் காஸீம் மன்னர் நேரிழை வீட்டிற் சென்றார். 37

கன்னி யெழுந்திருந்து சுத்தப் பன்னீராற் கால்கழுவி
வன்னமார் கடந்தலினாற் றுடைத்து வாழ்த்தி யருகிருந்தார். 38

வெண்கட்கரசியரே ஹுஸைனார் பெற்ற இளங்குயிலே
வண்ட னெஸீதுபடை வெலலவிடை வாழ்த்தி யனுப்புமென்றார்.

ராஜர் முடிசூடும் ஹுஸைனார் நாயக ரீன்றகண்ணே
தோவலி யெஸீதை வெல்லவிடையினைத் தாருமிளங்குயிலே. 40

சொன்ன மொழிகேட்டு மயங்கித் துடித்துப் பதைபதைத்து
தன்னிலே மெய்சோர்ந்து உடலெங்குந் தன்னை மறந்துநின்றார்.

மன்னர் புலிபாலர் ஹஸனார் மைந்தரே யென்னசொன்னீர்
பொன்னான மேனியெல்லாம் எனக்குப் புண்ணாக நோகிறதே. 42

எந்தனுயிர்க்குயிரே அஸனா ரீன்றதவப் பொருளே
வந்து மணமுடித்தீ ரெந்தன்மையல் தெளியவில்லை. 43

அங்கம் மெலிந்துருகிச் சலிப்பை யடக்கமுடியாது
திங்கள் முகங்கருகி மனைவி தியங்கியே நிற்கையிலே. 44

எங்கள் குடிக்கரசே ஹுஸைனா ரீன்ற குலக்கொடியே
தங்கள் சலிப்படக்கி விடை தந்தங் கனுப்புமென்றார். 45

கன்னி யெழுந்திருந்து அதபாய்க் காஸீம் பாதம் பணிந்து
மின்னல் விழிசிவக்கச் சலிப்பாய்விம்மிக் கரைந்தழுதார். 46

பார்த்து அப்துல் காஸீம் தன்னின் பாவை தலையுயர்த்தி [ல்வார்
வாழ்த்திக் கண்ணீர்துடைத்து முகத்தைப்பார்த்தொரு சேதிசொ

ஆதி யெழுத்தின்படி யணுவள வாகிலுந் தப்பாது
சோதி மஹ்ஷரிலே ஆகிரத்து ஜோடா யுதவி செய்வான். 48

என்ற மொழிகேட்டே ஆமீனென் றெழுந்து முகம்பார்த்து
வென்றி மஹ்ஷரிலே யுமக் கடையாளம் விள்ளும்மென்றார். 49

எங்கள் குலத்தரச ருஸைனா ரின்புறஞ் செல்வியே கேள்
என்கையின் சட்டையிலே கிழித்தே யிருக்கும்மடையாளம். 50

காஸீ முரைகேட்டே ராசி கத்தன் றனைப்போற்றி
ஹாஷீம் குலக்களிரே போய்வாரும் அல்லாவுதவியினால். 51

மக்க முஹம்மதுர்ற ஸூல்நபி மதுவாய் பேறினாலும்
ஹக்க னுதவியாலுங் கருணை யாகவே போய்வாரும். 52

வானத் தருசோறு மிறஸூல் வள்ளல் திருப்பேரரே
ஈன னெவலீதைவெல்ல வுமக்கு இறையோ னுதவிசெய்வான். 53

பொன் கரும்பு மொழியார் ஹஸனார் பூரிப்பார் மன்னவரே
என்களி கூறப் போய்வர வேக னுதவிசெய்வான். 54

மின்னிடை யின்மனைவி விடை வாங்கி யெழுந்திருந்து
மன்னரப் துல்காஸிம் பாய்ந்திடும்வரம்பரி யேறிச்சென்றார். 55

சிங்கததின் குட்டியது யானைத் திரளில் நுழைந்ததுபோற்
பங்க னெவலீதுடைய நிறைந்த பாலயம் போய்ப்புகுந்தார். 56

காஸீமைக் கண்டவுடன் உமறு கலங்கி மனமயங்கி
ஹாஷீம் கிளையிலிவர் உதித்த ஆண்பிள்ளைச் சிங்கமென்றார். 57

பார்த்து வுடலெறிந்து உமறு பல்லைக் கடித்துருக்கி
நேற்றையிற் பிள்ளையிவர் வெட்டுவதைப்பார்த்து இருப்பதென்ன

கோபத்துடனெழுந்து அஸரைக்குக் கொடூரமாய் வார்த்தைசொல்லிக்
தாவிப் படைபொருதி காஸீமவன் தலையை யறுப்பமென்றார். 59

சொன்ன மொழிகேட்டு அதற்குக் குடித்து விதழ்கடித்து
சின்னப்பிள்ளை யுடனே யெதிர்ததுப் போர்செய்வது ஞாயமல்ல.

எந்தனின் பிள்ளைகள்தான் நால்வ ரிருக்கிறா ரவர்களிலே
முந்திய பிள்ளையைப்போய்க் காஸீம் முடியை யறுத்திடென்றான்.

மூத்த மகனெழுந்து கொதித்து மூர்க்கமாய் வாளோங்கி
ஏற்றகுதிரையின்மேல் ஏறிக்காஸீ மிடத்தில் முடுகிவந்தான. 62

காஸீ மகங்கரித்துப் புலிமுன் கடாயது வந்ததென்று
தோசி யுமறையிங்கே யென்முன் சுறுக்காய் வரச்சொல்லென்றார்.

சொன்ன மொழி கேட்டுச் சூமன் சுறுக்காக வாளோங்க
மன்னரப் துல்காஸீம் அவனை வாளினால் வெட்டிவிட்டார். 64

தன்னிற் கிறு கிறுத்துச் சூமன் தரையில் விழுந்திடவே
பின்னு லொருமகனை யதட்டிப்போர்முன் னனுப்பிவைத்தான். 65

வந்து அகங்கரித்து அவன்கை வாளாலே யோங்கிவெட்டச்[டார்
சிந்தை மகிழ்ந்தவனைக் காஸீம்வாளாற் சிரசைத்துணித்துவிட்

இந்தப் படியேவந்து நால்மக்களும் இறந்து வருண்ட பின்பு
சிந்தை மிகக்கலங்கி உமறு சபையில் முடுகிச்சென்முன். 67

பார்த்து உமறுமன்னன் அசரக்கைப் பல்லைக் கடித்துருக்கி
நேற்றையிர் பிள்ளையிவர் வலிமை பார்த்தியா வென்றுசொன்னுன்

சொன்ன மொழிகேட்டு அஸறக்கு துடிப்பா யெழுந்திருந்து
துன்னும் பறியேறிக் காஸீம்தன்னைச் சுற்றி வளைந்து நின்று. 69

வாளாற் சமர்போரு இருவரும் மல்லாடும் வேளையிலே
காளை யவன்குதித்துக் குதிரையின் கால்களை வெட்டிவிட்டான்.

நின்ற குதிரைவிழக் காஸீம்கீழே நிற்கு நிலைபார்த்து
வென்றியுடன் ஹுஸைனுர் கச்சை விரைவாயனுப்பிவைத்தார்.

கச்சுக் குதிரைவரக் காஸீம் கடினப் பரியேறி
மெச்சி யலங்கரித்துப் பரியைமின்போல் நடத்தினரே 72

பொட்டை யறைக்கவன் எதிர்த்துப் போர்செய்யும் வேளையினிற்
கட்டழகு கார்காஸீம் அவனைக்கண்டொரு செய்தி சொல்வார். 73

வண்ட னெலீதுபடைச் சேனைகளின் மன்னரில் நீ பெரியோன்
சண்டைக் குதிரையுட அங்கபடி வாரை யிறுக்கலையே. 74

வார்த்தை மொழிகேட்டு அஸறக்கு வாரைக் குனிந்திருக்கப்
பார்த்தவுடன் காஸீம் கைவாளாற் பாரில் விழவெட்டினுர். 75

சாய்ந்தான் மலைபோலே பிள்ளைகீழ்த் தகப்பனு மேற்கிடக்கப்
பாய்ந்தார் குதிரைவிட்டுக்காஸீமவர் பாரிடி வேங்கையைப்போல்

மாவினி லேறிவந்த வீர மன்னர் சிரமுருளத்
தாவி படைபொருதி எலீது தளத்தைக் கறுவறுத்தார். 77

வெட்டுப்பட்டுக்கிடக்கச் சேனைதளம் வெட்டியே ரத்தஞ்சிந்த
சிட்டுப்போல் தான் பறக்கப் பரியைச் செருவிளை யாடிவந்தார்.

காஸீம் வரவுகண்டு ஹுஸைனுர் கண்ணுடன் கண்ணைவைத்து
வரச மருமகனே யெனப்போற்றி வாழ்த்தி மனமகிழ்ந்தார் 79

மைந்த ரெழுந்திருந்து தன்னின் மாதா வளவிற்சென்று
வந்து பதம்பணியப் பெற்றதாயார் வாழ்த்தி யணைத்தெடுத்தார்.

எந்தன் குலக்கனியே ஹஸனு ரீன்ற தவப்பொருளே
வந்ததே போதுமென்று வாயால் வாழ்த்தி மனமகிழ்ந்தார். 81

அந்நேரமே யெழுந்திருந்து காஸீ மழகாருஞ் சிற்றிடையாற்
சொன்ன பயத்தோடு பேசும் மனைவியிடத்தில் சுருக்காய் வந்தார்.

வஞ்சி யிலமயிலாற் ஹஸனார் மன்னர் மருமகளாற்
அஞ்சிப் பாதம்பணிந்து முத்தினால் ஆலாத்தி யேத்தினர்காண்.

பொன்னின் கனிக்கரும்பே ஹஸனார் புண்ணிய ரீன்றபெண்ணே
கன்னி குலக்கொழுந்தே நும்மையான் கண்டதேபோதுமென்றார்.

கண்டு மனமகிழ்ந்து இருவருங் கண்கள் களிகூர்ந்து
விண்டங்கிருக்கையிலே பாளயங்கள் வந்தது வென்றுசொன்னார்.

சொன்ன மொழிகேட்டுக் காஸீம் சுறுக்கா யெழுந்திருந்து
மன்னர் ஹுஸைன்மகளே எனக்கு வாழ்த்திவிடைகொடென்றார்

போய்வாறு மென்றுசொல்லி அரசி போற்றிப் பதம் பணிந்து
மாய னுமறைவெல்ல நமக்கு நாய னுதவிசெய்வான். 87

கோட்டைமதில் தாண்டும் வல்ல குதிரையின் மேலேறித்
தாட்டீக மாய் நடத்தி உமறு தளத்தினுட் போய்புகுந்தார். 88

காஸீமைக் கண்டவுடன் தளத்தின் கனத்த அரசரெல்லாம்
ஹாஷீம் கிளையிலிவர் உதித்த ஆண்புலிச் சிங்கமென்றார். 89

வேங்கையைக் கண்டகடா பயந்து மிரண்டு தெறிந்தாற்போல்
தியங்கவே சிறிதுதளம் நிற்கா தெங்குஞ் சிதறியோடிடவே. 90

வெட்டி மனம் பூரித்துக் குதிரையை வேகமாய்த் தானடத்தி
இஷ்டமாய் வானோரெல்லாம் பூமாரி பெங்குமேதான்பொழிந்தார்.

ஆதி தனைப்போற்றி வானோர்கள் ஆமீன் தனை முழங்கிச்
சோதி ஹுஸைன்மகளாற் தமக்குச்சோபன மென்றுசொன்னார்.

கன்னி குலக்கொழுந்தே ஹுஸைனார் கண்மணி யானபெண்ணே
சொன்ன மடமயிலே காஸீம் வரச் சோபன மென்றுசொன்னார்.

காஸீம் வரவுகண்டு மனைவிகதீஜம்பு நாச்சியாரும்
வாச ருஸைமகளா ரெழுந்து மனதுகளி கூர்ந்து. 94

கன்னியர் நாச்சியாரும் எழுந்து கற்பக மெய்குளிர்ந்து
பொன்னினா லாலாத்தி னப்துல் காஸீம் முன்னாலேயேந்திநின்றார்.

வந்து இருபேரும் சப்ரமஞ்சத்தின் மீதிலிருந்து
சந்தோஷ மாகையிலே பாளயம் வந்தது என்று சொன்னார். 96

கேட்டவுடன் காஸிம் சுறுக்காய்க் கீழே யிறங்கிவந்து
தாட்டீக மாவுமறை வெல்லத் தாக்கிறே னென்று சொன்னார். 97

சொன்ன மொழிகேட்டு மயங்கித் தோகையர் கண்ணீர் சிந்தி
மன்னர் தனையழைத்து அதற்கு மறுமொழி சொல்லலுற்றார். 98

இரண்டுதரம் போய்வந்தீர் அந்த றப்பனுதவியினால்
இன்று படைபோறீ ரெனக்குரத்த வாடை மணக்குது காண். 99

கண்ணினொளிவாகத் துலங்கும் கல்பினுயிர்க்குயிரே
வண்ணக் கிளிக்கரசே போகச்சொல்ல மனதுகலங்குதுகாண். 100

சரல் துடிக்கின்றதே மூக்கில் ரத்தவாடை மணக்கின்றதே
வாயிற் கவிச்சிறந்த வாடை மிகவும் மணக்கின்றதே. 101

இத்தனை பாராட்ட மனது இரங்காமல் நீர்போறீர்
கத்தன் கிருபைசெய்து உம்மையென்று காத்து உதவிசெய்வான்.

கன்னிமொழிகேட்டுச் சுறுக்காய் காஸீமெழுந்திருந்து
வன்னக்குதிரையின்மேற் பச்சைரத்ன முத்தின் துருவும்வைத்து.

கச்சுக் குதிரையின்மேற் பச்சை ரத்ன முத்தின் துருவும் வைத்து
வச்சிரத்தாலிழைத்த முகப்பட்டை வைத்துமே தான்கட்டினர்.

மாணிக்க ரத்தினத்தால் இழைத்த வயிரக்கடிவாளத்தைப்
பேணிக்கை யாய்க்குதிரை தனக்குப் பேர்பெறத் தான்சேர்த்து.

சிங்க முக்காலீயது பலமணி சேர்த்து இழைத்ததனைத்
தங்கள் குதிரையின்மே லதனைத் தளராமக் கட்டினரே. 106

கமர் பந்தினையெடுத்து இடையினிற்கட்டி. சரூபத்துடன்
ஒன்பது ரத்தினத்தா லிழைத்த வுயிர்முக ஸல்லாவும். 107

அன்புடனே மகிழ்ந்து எடுத்து அங்கி நிஜாரணிந்து
இன்ப சரூபந்தையெடுத்து இலங்கவே தானணிந்தார். 108

சந்தனம் புனுகுஜவா தெடுத்துச் சரீரமெ லாம்பூசி
இந்திர னழகுபோ லிலங்க ஏறினார் குதிரையின்மேல். 109

ஆன மகன் காஸீம் ஜோடிப்பின் அழகு தனைப்பார்த்து
வானவரான மாதா மிகவும் வாழ்த்தினரங்நேரம். 110

தந்தை முகம்பார்த்துத் தனைப்பெற்றதாயார் முகம்பார்த்து
சிந்தை கலங்கி நிற்குந் தான்றிருத் தேவியார்க்குஞ் சொல்வார்.

எந்த னெழுத்தின்படி யிருக்கும் என்செய்வோம் பெண்மயிலே
அந்த மட்டிற்காஸீம் பரியை அதட்டி நடத்திவிட்டார். 112

வாசியனுமனித்துக் காலின் தூசி வானலோ கம்பறக்கக்
காஸீம் அலங்கரித்து வருவதைக் கண்டார் படைவேந்தர். 113

வாசின் மீதேறி ஆரவாரமாக வருகின்றதை
மூசிகள் தாங்கள்கண்டு படையை முன்னே நெருக்கி நின்றார். 114

ஆனைப் பரித்திரளிற் சிங்கம் அலறியே பாய்ந்ததுபோற்
சேனைப்படைத்தலைவர் முடியைச் சேர்த்துக் கறுவறுத்தார். 115

மாவைப் பிளந்தறுத்து அதிலேறும்மன்னரைச் சூரையிட்டுத்
தாவிப் படைபொருதி வெகு களத்தினைக் கொள்ளையிட்டார். 116

ஆனைத்தலையுருள அதிற்சேர்ந்த ஆண்பரி தானுருளச்
சேனையோர் தான்வெருள எங்குஞ் சிதறக்கறுவறுத்தார். 117

வெட்டிக் கறுவறுத்து கறுபலா வெளியினில் நின்றுகொண்டு
மட்டி உமறையிங்கே சுறுக்காய் வரச்சொல்லு மென்றுரைத்தார்

சிங்கத்தின் குட்டியுநான் கண்ணைத் திறந்துமிகப்பார்க்கப்.
பங்கஉமறையிங்கே போருக்குப் பாங்காய் வரச்சொல்லுமென்றார்

ஆதி யருள்தூதர் மருகர் அலிப்புலி பேரரென்று
ஏது மறியாத உமறை யிங்கேவரச் சொல்லென்றார். 120

காஸீமுறைகேட்டு உமறிரு கண்கள் நெருப்பெரிய
வாசிபடையனுப்பி அவரை வந்து வளைந்துகொண்டான். 121

வந்து வளைந்து கொண்டு உமறுமந்திரி தானெதிர்த்துப்
பந்தயப்போராட வாறுமென்று பாதகன் சொல்லினனே. 122

சொன்ன மொழிகேட்டு காஸீம் சுறுக்கா யெழுந்திருந்து
மின்னலிடிபோலே யிருவரும் வெட்டத்துணிந்தனரே. 123

கொக்குத் தளந்தனிலே விசையாம் ராஜாளி பாய்ந்ததுபோல்
திக்குத் திசைகளெல்லாம் பிணமாய் துரத்திக் கருவறுத்தார். 124

வெட்டிக் கருவறுத்து இரத்தம் வெள்ளம்போ லெங்குமோட
மட்டில்லாச் சேனைபடை யிறந்து மாண்டறு ர்றுபலாவில். 125

ரத்தத் துளிதெரித்துக்காஸீம் உடலெங்குந் தானனைந்து
சுத்த மொழிகாஸீம் ரத்தவாடை மயங்கிநின்றார். 126

ரத்தக் களைதாங்கிக் காஸீமவர் நிற்கு நிலைபார்த்து
சற்று மிரங்காமல் உமர்ஸாது ஜல்தியாய் முன்னில்வந்தான். 127

சுற்று வளைந்துநின்ற தளத்தைக் கிட்டநெருங் கொட்டாமற்
சற்றும் மயங்காமற் காஸீம் வெட்டித் துணிந்து நின்றார். 128

இத்தனை பேருடனே அப்துல்காஸீம் எதிர்த்துமே போராடிச்
சித்தம் மயங்கிடவே தண்ணீர்த் தாகமும் வந்ததுவே. 129

இப்படிப் போராடிக் காஸீமவர் நிற்கின்ற வேளையிலே
தப்பாமல் நாவுணர்ந்து தண்ணீர்த்தாகம் பெரிதானார். 130

இந்தப் படியாகச் சமர்செய்து நிற்கின்ற வேளையிலே
சிந்தை மகிழ்வாகி உமர்ஸாது சுற்றி வளைந்துகொண்டான். 131

கெற்பங் கலங்கிடவே திடுக்கிடுங் கிட்டும் புலிபோலே
அற்பர் பயந்தோடத் துறத்திவிட் டங்கனே வந்து நின்றார். 132

நிற்கையிலே மயங்கி அங்கு றஹ்மானை தானினைத்து
மக்க நபிதமையும் அலியையும் வாழ்த்தியே போற்றிநின்றார். 133

அந்த ரணக்களத்திற் சரீரம் இரத்த மண்ம்வீச
அந்தசமயத்திலே காஸீமவர் அல்லாஹூ என்று நின்றார். 134

சுரணை மதிமயங்கிக் காஸீமுடல் சோர்ந்தங் குள்ளமுருகிக்
கருணையப் துல்காஸீம் ரத்தக் களையில் மயங்கிநின்றார். 135

வெட்டி மனமயங்கிக் காஸீமவர் நிற்கின்ற வேளையிலே
துட்டனு மறுவந்து காஸீமை வெட்டினான் கைவாளால். 136

வெட்ட வலநுபுரம் விழுந்து வெள்ளம்போல் ரத்தஞ்சிந்த
இட்ட முடலங்காஸீம் அவனை எட்டியே வெட்டிவிட்டார். 137

காயத்தில் ரத்தஞ்சிந்த இருகண்கள் நெருப்பெரிய
நாயனைப் போற்றிசெய்து காஸீமவர் நன்மை நிலஞ்சாய்ந்தார்.

தங்கப்பொன் மேனியது தளர்ந்து தரையில் விழுந்ததுபோல்
அங்கம் மெலிந்துருகிக் காஸீம் அல்லா வெனச் சாய்ந்தார். 139

மண்டல முமதிரக் கறுபலா மண்ணின்மேற் காஸீம்விழ
வண்டர் நெருக்கமு னெருங்கியே வந்தார் தலையறுக்க. 140

கண்டு குதிரையது எழும்பிக் கனைத்து அனுமணித்து
வண்ட ரணுகாமற் கடித்து வாசி மிதித்ததுவே. 141

கிட்ட வரவிடாது குதிரை கிளறி யனுமதித்து
எட்டி முகம்பார்த்துக் குதிரை யேங்கி யழுததுவே. 142

தங்க மகன்காஸீம் விழுந்து தரையிற் கிடக்கையிலே
சிங்க மெழுந்ததுபோல் ஹுஸைனுர் சீறியெழுந்து வந்தார். 143

வந்து எடுத்தணைத்துக் காஸீமை வாரி மடியில் வைத்து
சிந்தை மதிமயங்கி அல்லாவென்று செப்பினு ரப்போது. 144

எங்கள் குடிக்கரசே மகனே யிருப்பாயென் றெண்ணியிருந்தேன்
தங்க மகனுரே உந்தன் தலையின் விதியிதுவோ. 145

மன்னர் துயரமுறச் சொர்க்க மாதர் துயரமுற [ண்டார்.
ஜென்னத்தி லேயிருக்கும் வானேரெல்லாஞ் சேரத் துயரங்கொ

வானம் மலைகடலும் இந்த வையகமுந் தான்புலம்ப
ஆனமகன் காஸீமை ஹுஸைனுர் அன்பா யெடுத்துவந்தார். 147.

கண்டு ஹுஸைன் மகளார் காஸீம் காதலி தேவிசொல்வார்
வண்டன் படையிற் செல்லமவுத்தும்மை வந்து பிடித்ததுவோ.

தங்கம்போல் மேனியிலே வெட்டின தழும்பு தனைப்பார்த்து
மயங்கி மனங்கலங்கி அரசியர் மண்மேற் புரண்டழுதார். 149

வாடி மிகச்சலித்துக் கன்னியரும் வல்லவனை நினைத்து
நாடிய நாட்டப்படி நடத்திடும் நாயனே உன்செயலோ. 150

கன்னிவயதெனக்குத் தலையிற் கத்தன் விதிப்படியென்
றெண்ணி ஹுஸைன் மகளார் இப்படி யேங்கிப் புலம்பலுற்றார்.

சார்ந்து அழியவில்லையே கலியாணச் சடங்கு முடியவில்லையே
நடந்தல் தனையவித்து இருவருங் கூடி நீராடலையே. 152

மங்கையர் தன்னுடனே கொஞ்சி மஞ்சள் நீராடவில்லை
செங்கையி னலெடுத்தே இருவரும் செல்வமும் பார்க்காமல். 153

சிங்காசனந்தனிலே இருவருஞ் சிறப்பா யருகிலிருந்து
உங்கள் மனங்குளிர இருவரும் ஒற்றுமைப் பார்க்கலையே. 154

பொன்னினுற் பல்லாங்குழி அதற்குட் போட்டு முத்துவணி
தன்னை விளையாடி இருவரின் சமர்த்து மறியாமல். 155

கோதிக் குழல்முடித்த கஸ்தூரிக் கூந்த லவிழ்க்கவில்லை
சாதி மணமுடித்த முல்லைமல்லி மாலையும் வாடலையே. 156

கொண்டை சரியலையே ரத்னமமைத்தக் கூந்த லவுக்கவியே
செண்டு மணமுடித்த மலர்மாலைச் செண்பகம் வாடலையே. 157

கூந்த லவிழ்க்கலையே தங்கக் கொப்புக் கழட்டவில்லை
சார்ந்து முடித்த பின்னல் அவிழ்த்ததை மாறி முடிக்கவில்லை.

சோடா அவிழ்க்கலேயே ரத்தினச் சுட்டி கழட்டலேயே
வாடாக் கொழுந்துமுல்லே மலர்வாச மலர்ந்த பூவாடலேயே. 159

சாந்து புனுகுபன்னீர் உயர்ந்த ஜவ்வாது மழியவில்லே
சோர்ந்திடாக் கூந்தலது எனக்குச் சோருதே யென்சொல்வேன்.

வாளி பிரளவில்லே தங்கப் பணிகள் கழட்டவில்லே
கோவி வயிரத்ன மதிற்செய்த கொப்புக் கழட்டலேயே. 161

ஒற்ற சூரியப்பிறை நத்து உயர்ந்த பதக்கமுடன்
கொத்துச் சரப்பளியின் மற்றப் பணிகூடக் கழட்டவில்லே. 162

பொட்டுக் கரையவில்லே பற்காவி போட்டபல் மாறவில்லே
மட்டு மயங்கவில்லே வாயிற்போட்ட பாக்குஞ் சிவக்கவில்லே. 163

மஞ்சள் முகத்திலிட்ட அதன் மணமு மழியவில்லே
கஞ்சைக் கடகமணி அதனேக் கழட்டி யெடுக்கவில்லே. 164

தாலிச் சரடுகட்ட மஞ்சளிட்ட நூலும் மயங்கவில்லே.
மாலேயும் பாஜூபந்தும அதைக் கோர்த்த நூலும் பழகவில்லே.

கையினி லிட்டரத்ன வளேயல் கங்கண மவிழ்க்கவில்லே
தையல் மெலிந்துருகி மிகவும் தன்னிலே தான்சோர்ந்து. 166

ஒண்டொடி யாளிடையி லிருந்த ஒட்டியாணப் பட்டயமும்
அன்று மெலிந்ததினல் இடையில் அதுவுந் தளர்ந்ததுவே. 167

பாதத்தி லிட்டரத்னத் தங்கத்தின் மாடக முன்கொலுசும்
வேதனே யாலுருகிச் சிலம்பும் மெலிந்து தளர்ந்ததுவே. 168

இந்தப் படியெனக்கு உவப்பா யிருந்திட்ட கோமானே
எந்த விதத்தாலே மனதை எழியாள் பொருப்பேனென்ருர். 169

தாயார் மனமுருகிச் சீரத்தின் தழும்பு தனேப்பார்த்து
மாய வினேயாயின்து முடிவுநாள் வந்ததோ என்மகனே. 170

இத்தனே நாள்வரைக்கும் புலிபோல் வளர்த்தேனே யென்மகனே
சித்தம் மகிழ்ந்திடவே எந்தன்முகஞ் சற்று நீ பாராயோ. 171

இத்தனே தூரமட்டுஞ் சொல்லக்கேட் டந்தஹஸன்மகனர்
கந்தரப் துல்காஸீம் முழித்துக் கண்ணேத் திரந்தனரே. 172

மாதா முகம்பார்த்துத் தங்களின் மனேவி முகம்பார்த்துச் [தார்.
சோதியப் துலகாஸீம துன்யாவிட்டுச் சொர்க்கமே போய்ச்சேர்ந்

மன்னர் ஹூஸைனரப்பா தங்களின் மகளார் முகம்பார்த்து
என்னசெய் வோமமகளே தலேயில ஏக னமைப்பிதுவே. 174

இத்தனை நாளிருந்து மகளே யிதுக்கா மணமுடித்தேன்
பத்தூாவை நீ பிரிய மகளே படைத்தோன் விதியிதுவோ. 175

இப்படி யேமொழிய மகளார் இறையோ னிடந்தனிலே
எப்படி நீசெய்தாலும் எனக்கு இதுவே ஷக்கூரென்றார். 176

கட்டின தாலியதை யறுத்துக் கழட்டியே போட்டாருடன்
மூட்டியேதுக்கத்துடன் கண்ணீர் முத்தினைப் போலுதிர்த்தார். ()

என்னுடனொத்தபெண்கள் முகத்தினிலெப்படி நான்முழிப்பேன்
சின்னஞ் சிறுவயதில் தலையில் சிந்திக்க எழுதினனே. 178

வாழ்கிற பெண்களுடன் சேர்ந்து வளமாய் விளையாடத்
தாளுமோ வென்சரீரம் பொறுத்துத் தரிக்குமோ வென்மனது. ()

கொட்டுங் கலியாணம் பெண்களின் கூட்டத்தில் நான்போக
இட்டமா யென்மனது போகவர ஏற்குமே னென்னசெய்வேன். ()

காவினிற் பூப்பறித்து விளையாடுங் கன்னியர் தன்னுடனே
மேவி விளையாடிப் போகவர மெலியுமே யென்மனது. 181

பட்டினுடை யுடுத்துச் சிங்காரித்துப் பண்புள்ள பெண்களுடன்
இட்டமுடன்கூடி உகந்து இருப்பதற் கென்ன செய்வேன். 182

என்னுடன் நீர்பேசி ஒருநாள் இருந்து மகிழாத
மன்னரே நுமது நெஞ்சைக் கபுறின் மண்ணுமே தீண்டிடுமோ. ()

என்னை விட்டுப்பிரிந்தீர் அரசேஎப்படி நானிருப்பேன்
மன்னரே நான்கூட அங்குவர வல்லோ னுதவிசெய்வான். 184

ஆதி பெரியவனே என்னை நீ ஆளும் றஹ்மானே
நீதர் அப்துல் காஸீம் கூடப்போக நித்தனே யுதவிசெய்வாய். ()

ஏழுவயதெனக்கு துனியா வெப்படி யோவறியேன்
வாழும் வயதுவந்தாற் சரீரம் வாடிமெலிந்திடுமே. 186

இன்னுஞ் சிலகாலம் தனியே இருந்து வருந்தாமல்
மன்னவர் தன்னுடனே கூடப்போக வல்லோனே யுதவிசெய்வாய்.

ஆண்டவனே இந்த சிறியாள் அழுது சலியாமல்
மாண்டவர் கூடயிப்போ போக வல்லோனே யுதவிசெய்வாய். ()

தங்க முடிசூடும் அரசர் தனியா யிருப்பார்கள்
அங்கே யவர்தமக்குப் பணிவிடை யார்செய்யப் போறார்கள். 189

தன்னைத் தெரியாமற் புலம்பித் தரையிற் சுழன்றுவிழ
மன்ன ருஸைன் மகளைத் தாங்கியே மாமி யெடுத்தணைத்தார். 190

மாமி யெடுத்தணைத்து தங்களின் மார்போடே தான்சேர்த்துப்
பூமியிலே கனியை உனக்குப் பொருந்த மணமுடித்தேன். 191

ஆசை மருமகளே என தன்புள்ள பேரரசி
கூசிடுதே பார்க்க அங்கம் கொதிக்குதே யென்னசொல்வேன். ()

வாடி மயங்கின்றதே சரீரம் வருந்தித் துடிக்கின்றதே
ஆவிப் பறக்கின்றதே என்தன் அருமை மருமகளே. 193

சப்பிர மஞ்சத்தி லிருபேருட் சாய்ந்தே யிருக்காமல்
இப்படி யுன்னைவிட்டு மகனார் எப்படி போனாரோ. 194

அன்ன மொழிகுயிலே உந்தன் ஆசையும் பாராமல்
உன்னைப் பிரிந்திடவா மணம் முடித்தேன் கண்மணியே. 195

இப்படியே மயங்கி எல்லோரும் ஏங்கித் துடிதுடித்து
எப்படி யானாலும் இறையவன் எங்களைக் காத்திடுவான். 196

என்றுஷுக் கூறுசெய்து காஸீமை யெடுத்துக் கபன்சூட்டி
வென்றியுடன் றொழுது அவ்விடம் வேந்தை யடக்கஞ்செய்தார்.

தோங்கல்

நல்லமனத்துடன் காஸீம்தன்னை நயந்தேகபன் சூட்டித் தான்றொழுது
எல்லோரு மொன்று யடக்கஞ்செய்து இறையோ னளவிலே சுக்கூறுசெய்து.

அல்லலுடன் தண்ணீர் தவனத்துட னரிவைமார்பட ஹுஸைனார்கண்டு
வல்லநாயகன் செயல்தனக்கு வாக்குமனமொத்தே யிருக்கவேணும். 199

முன்னுண்டாகிய நபிமாருக்கு முழுதும்பெரியவ ரவர்களுக்கும்
தன்னை நிகரில்லாத துய்யநாயன் தந்தான் பலபல விசனங்களை. ()

வுன்னிக்கலங்கா மவர்களெல்லாம் உடையோ னளவினில்சுக்று செய்தார்
கன்னிமார்களே யப்படிக்குக் கருத்துள்மகிழ்வாக சுக்கூறுசெய்யும். 201

ஆதியிறையவன் விதம்விதமாய் அவனிதனிலுள்ள மாந்தருக்கு
வேதனைப்பட விடுவதெல்லாம் விளக்குஞ் சுவர்க்கத்தின் வாழ்வதாகும். 202

ஏதும் நம்மாலே முடியாதென இறஸூல்போனா ரவர்களுக்கு
ஓதினார்புலபலவிதமாய் ஒவியத்துச்செய்தார் சுக்கூறுசெய்ய. ()

மன்னரப் துல்காவீ மிறந்ததற்கும் மற்றஸ்ஹாபிக ளிறந்ததற்கும்
இன்னும் பலபேர்க ளிறந்ததற்கும் இலங்கும் அலியக்ப ரிறந்ததற்கும். 204

பொன்னின் மணிவாயால் வஸியத்தைப் போதித்தார் நபிதிருபேனார்
கன்னிமாரெல்லாங் கேட்டுவந்து கத்தனையுந்தன் காவலென்றார்.

நீதம்விலகிலா நவமணியாய்நீண்ட புவியுள்ளோர்க் கரசாய்நின்ற
ஆதிஒயாளிவினில் அவதரித்தே அறுசில்கபு சோடேயேறிமீண்ட
வேதநபியுல்லா காலந்தன்னில் விளம்புஞ்செயமான செய்திகேளீர்
பூதலந்தன்னி லெனக்குப்பின்னர் புவலும் பாதகஞ் செய்வாரென்றும் 207
அந்தமொழிப்படி நமக்காயிற்று அச்சப்படவேண்டா மிச்சைகொள்ளும்
இந்த துனியாவில் வெகுகாலமா யிருந்தார் பின்னுமவுத்தாகவேணும். 208
எந்தவீரரும் நிலையில்லாமல் எல்லா மடங்கினர் மண்ணுக்குள்ளே
புந்திமகிழ்வாக விறையோன் பக்கல்புகலும் சபூர்செய்துகொள்ளுமென்றார். ()
பாதகம் நம்மைச் செய்தவர்கள் படுமதாபுகள் கியாமத்தினில்
வேதனைமிகப் படுவதுண்டு விதத்தில்நல்வேளை நாமிருப்போம். ()
ஏதும் நினைத்திட வொண்ணாதென எங்கள் முஹம்மது திருப்பேரனார்
ஓதிப்பலபல விதமாகவே ஒவஸியத்துச் செய்தாரன்னேரமே. 211

## கண்ணிகள்

இந்தபடியாக ஒவஸியத்து எல்லோருக்குஞ் செய்தபின்பு
சிந்தைமகிழ்வாக எல்லோருக்குஞ்சேர்ந்து சுக்கூறுசெய்தார். 212
என்ன வினைவந்தாலும் அவர்கள் இறையோனிடமாக
இன்னாலில்லாஹி யென்று ஓதியிருந்தார் கறுபலாவில். 213
சொர்க்கநகர்க் கரசாய் துனியாவினில் துன்பமிக வடைந்து
மிக்கநபிபேரர் ஹுஸைனா வரிப்புலி போலிருந்தார். 214
ஆதியின் கற்பனைக்கு சபூருய் அல்லா அமானமென்று
சோதிமதிபோலே ஹுஸைனார் சுகமாக வீற்றிருந்தார். 215
இந்த மட்டுஞ்செய்த காஸீ மெழிலார் படைப்போரை
அந்தமுடன்பாடி முடித்தேனல்லா வுதவியினால். 216
ஆதியுவப்பாருங் காஸீம் படைப்போ ரணியிலேவாழி
பூதல மீதிலுறு மாந்தர்கள் புகழுடனேவாழி. 217
தேசமெல்லாம் வாழி காஸீமவர் செல்வமுமேவாழி
பாசமொடு படித்தோர் கேட்போரும் பாங்குடனேவாழி. 218

காஸீம் படைப்போர் முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

இஃது முத்துப்பேட்டை

மூஹியித்தீன் பக்கீர் புலவரவர்கள் பாடிய

# தௌஹீ துப் பதம்

---

## காப்பு விருத்தம்

அலிபொடுஞ்சிலந்தலங்கி ஆணிமுத்தா
யண்ணல் வடிவாயிருந்த அஹ்மதென்று
கலிகூர்ந்தேன் நபியிறஸூ லிருதாள்ரண்டும்
காதலிற்றேன் னிரவுபகல் கருத்திலுள்ள
கெலித்தீர்க்கக் கதியெனவே வருவீர் யெப்போ
கிருபைகுரு பராபரமே யருளுமிப்போ
சலியாமல் எவ்வுயிரே கார்க்குமாதி
சந்தேக மணுகாமல் காப்புதானே.

---

## பதம்—நோட்டு—ஆதிதாளம்

### பல்லவி

செம்பொற்பாதம் யெனக்கருள்
ஜெயவள ரஹ்மது மஹ்மூதா.

### அனுபல்லவி

செம்பொற்பா ரின்பந்தாங்கீனே
கோனே தானோன் புகழ்திரு. செம்

### சரணங்கள்

ஆதியருள் புகமோதிநீர் மேவியவண்ணல் வடிவுரு நவநீதா
அலிபுக்குள் அலிபாகவேநின்ற அஹது ஸமது நிறைந்தருள்நாதா
சீமுக்குள் சீமாகவே யெங்குஞ்சிறந்து விளங்க மஹ்மூதா
தீன் தீனென் றிறையருள் தங்கியசெங்கோல் விளங்கிய ஜெயவேதா.

ஹூவுக்குள் ஹூவாகவேயெங்கும் குருவே நிதியே யருள்கனியே
குதறத்தருள பெற்றிலங்கியமதியே குன்குதாத்தின்மெய்கெதியே
அண்ணல மயில்லாபுருவா நின்றுடுந் திருவே நவநிதியே
ஆசைகனி மறையே புறுக்கா னுகவத்தசுடரே ஜெயநிதியே. செம்

தவறுதின்ஜீல் ஸபூருபுருக்கான் சதுர்வேதபொருள் மறைதானே
தாஸீம்காஸீம் யாஸீமென்குரு தங்கி யிலங்கிய கதிர்தானே
வாசம்புகழ்திரு நாலாரெழுத்தினில் வந்துயிலங்கிய செந்தேனே
லிவாவுல்மஹ்மூதென்னும்பலகையில் வலம்பிரியாகிய யெங்கோனே.

ஹாஷீம்குலநிதி அப்துல்லாதிரு கண்மணியாகிய மஹாராஜா
ஹஸரத்தாமீனு ரீன்றருளான காமிலேயெங்கள் மஹாராஜா
தாஸன்முஹம்மது முஹிய்யத்தீனுக்கருள் தருணமிது நேரமருள்போஜா
றஞ்சம்தஞ்சம் நெஞ்சமிதுவேளை சரணம் சரணம் கெதிராஜா. (செம்)

---

பதம்—இராகம் நாதனாமுகாரி சாப்பு தாளம்

பல்லவி

ஆதி வொளியில் பிரிந்தேக சுடராய் நின்ற
அண்ணல் வடிவோரே
அப்துல் லாவின் அருமை மகனாரே
அஹ்மது றஸூலுல்லா மென்பீரே.

சரணங்கள்

சோதியிலங்க கதிர்துலங்க ஆதமுதல்
துய்ய ஐம்பத்தொன்றில் தோற்றிப் பிரிந்தகடல்
போதராஜ ரப்துல்லாவின் திறந்தவுடல் புறுக்கான் சிறந்தோரே
மூன்றுவேத மதிக்க யுகந்தோரே குபிர்முழுது தெரிக்கவிளைந்தோரே. (ஆ)

ஆதியறு சிடத்தில் யேகவலுவுங் கொண்டோர்
அஹதுல்ஹது சமதாக அநேகம் விண்டோர்
ஏகசிறந்த பெரும்வாச மதியங்கொண்டோ ரின்பந்தருவீரே
சக்கராத்தினி லன்புசெய்வீரே மஹ்ஷரினில் துன்பந்தீர்ப்பீரே. ()

பாதம்பூமியி லணுகாமல் வலுவுங் கொண்டோர்
பாற்றவ ஜீகரங்கள் தோற்றஜீயமு முண்டோர்
ஏகமதியிலங்கும் கூடுபுருவங் கொண்டோர் யிலங்கும் மஹ்பூபே
யருள்மறைபொருளே முஸ்தபாவே யெந்தனை நீராளுங் கற்பகாவே. (ஆ)

மன்ன ரபூபக்கரின் கண்மணியாய்ப் பிரிந்த
மங்கையாயிஷாம்மடி தங்கள் சிரசு கந்த
கன்னல்மொழி மரியகம்கல்பு நிறை குளிந்த காஸீமென்பீரே
முஹம்மது முஹியத்தீன் தாசனுக்கருள்வீரே எங்கள் காரணமஹ்மூதே. (ஆ)

## பதம்—இராகம் தோடி சாப்பு தாளம்

### பல்லவி

நாதரே நபிமுஹம்மது நிதியே—ஜெய
நாலுவேதங்கள் புகழ்போதே முஹம்மதுவே.

### சரணங்கள்

காதங் கமழும் மக்காக ரப்துல்லாவே
கண்ணின் மணியே மஹ்மூது யென்கோவே
நீதி புருக்கானுக்கு ராஜருல் லாவே
நேசத்தந் தெனையாளும் ராஜர் முஹம்மதுவே. (நாத)

மங்காத மலக்கூத்தின் மாமணி மருவே
மாசில்லா ஜெபரூத்தின் நாசூத்தின் வடிவே
யெங்கும் புகழும்ஜெய லாகூத்தின் தெளிவே
இலங்கிட சகலோர்க்கும் துலங்கிடும் வொளிவே. (நாத)

கானில்மான் முயலோடுந் தானுமை யுரைத்தே
கையினல் மண்வாரி பதுருவை ஜெயித்தே
பார்த்திட சகலோரும் நயம்பெற மதித்தே
பாதந்தன் யெனையாளும் பையனை நினைத்தே. (நாத)

வானில் மதியே கண்ணல் வாவென்று யழைத்தே
வளரும்மதியே ரண்டு பாகமாய்ப் பிரித்தே
காதல் ஹபீபுக்கு நயம்பெற வுரைத்தே
கவலைகள் தீருமிப் போகாவீமே நினைத்தே. (நாத)

தாஸன் முஹம்மது முஹியத்தீ னெனையாளும்
சமய மிதுசமயம் யெசமான பாரும்
ஆசை புகழும் சிந்தை கலிமாவே தாரும்
அஹமதே யெங்கள் மஹ்முதே யெப்போதும். (நாத)

---

## பரிபூர ஞானந்த பலவரண மஞ்சு

### காப்பு விருத்தம்

அலிபொடுஞ் சிறந்ததிரு அஹதுஹதா வண்ணல்வடி வான மஹ்பூபுவென்று, களிகூர்ந்தேன் பஃஷூக்கு னிருதாளிரண்டு கண்ணில் வைததே னிரவுபகல் சருத்தினுள்ளம், கலிதீரத் ததி யெனவே வருவீரெப்போ கமலமது மகிழ்பெருகு நேரமிப்போ, சலியாம லெவ்வுயிலைரக் கார்க்குரதி சந்தேகப ஜுகாமல் காப்பு தானே.

பதம்—இராகம் சங்கராபரணம் தோடி ஏகதாளம்

வாசனை சவால் பல்லவி

அண்ணல் முஹம்மது தன்னை யுகந்துநின்
ஆனந்தமாகும் பெண்ணே—மகிழ்ந்துநின்
அம்பரமேருஞ் சொன்னேன்—சிறந்துநின்
ஆசையைக் கொள்ளோன் முன்னே.

அநுபல்லவி

முன்னுளியாய் மூச்சுடராய் மூடியமுத்தது யேகமதாய்
தன்னால் நுரையாயிடம்பிரிவாய் சாரூபசாமீப சாயுச்பமதாய்
வண்ணமொழிவாய் யஹூதுஹூதாய் வட்டம் நிரம்பிய திட்டமதாய்
எண்ணுயிரங்கோடி சிபமதாய் ஏகம் நிறைந்திடும் போகமதாய்.

மன்னவன் போற்றிடும் மாய்கையாம்
மறவாகவே தன்னுக்குள் ளாகியாம்
நுரைதன்னாலே பொங்கி வழிந்ததாம்
நொக்தாகிய சொர்க்கம் நுழைந்திடுர்வீதியாம். (அ)

அலிபுடனெலாம்கூடி கலந்ததென்ன ஆனந்தமீமுமட்டுந்
தனித்ததென்ன
துளிருள்ள யேயிமுன்னை மரித்ததென்ன சூஸ்திரத்தா
லுவந்தணைந்ததென்ன
சுலிகூர்ந்தஹூவ்வுக்குள் நுழைந்ததென்ன காயக்கண்டாகை
வைத்துமகிழ்ந்த தென்ன
தெளிவாக முஹம்மதுவே சேர்ந்ததென்ன தேன்சொரிய
காய்பழுத்து விழுந்ததென்ன

தெளிவான கனியெடுத் தின்னடி—இன்பம்
தித்திப்பு ருசியதைப் பாரடி—மனம்
சலியாமல் யெப்பொதும் நாடடி—மறு
தாமரைப்பூத்த தலத்தைப் பாரடி. (அ)

லாமுக்குள் நூனுகிதுக்கத்தாகி நல்லதொழுமணி
திரண்டுபச்சையாகி
சீமுக்குள் சீமென்றசித்துமாகி சிறந்தபெகினென்னு
மரங்கொப்புமாகி
மாணுக்குள் மரையாகிமஹ்பூபாகி மாங்கனியுங்கொட்டை
யிலாத்தின்னுமாகி
சாணுக்குள் ளேகஸமதானமாகி தன் ரூபமில்லாத
சத்தமாகி.

தோணுது அதிசயம் பாரடி—அந்த
சூத்திரப் பாவையை நாடடி
லாவென்று அன்புடன் கூரடி—ஜெய
வள்னல் முஹம்மதை வைத்து உள்ளங்கொள்ளடி.(அ)

பாலுக்குள் முகந்தெரியா திருப்பதென்ன பழுக்கவைத்து
பார்த்தவுடன் தெரிவதென்ன
நாலாறு யிருபத்தி நாலுக்குள்ள நன்புமது ஒன்பதுதான்
திறப்பதென்ன
காபென்ற பதினைந்து அடக்கமென்ன கமலக்கண்
திறந்தவிடம் பார்ப்பதென்ன
பாழான சடலத்தி லடக்கமென்ன பார்த்தவுடன் பயந்தோடி
யொளிப்பதென்ன.

கூறடி யதுமுன்னே செய்தியே—கரங்
கோதியே பொருமுத்தக் கொள்வியே—நல்ல
சீராக யதினுடன் சேர்வியே—ஜெய
செம்மல் மஹ்பூபு சிறந்திடும் பாதையே. (அ)

குனகுதா துயிலென்ற வெள்ளம் பார்க்குதறத்தின்
கம்மாத்தின் கப்பலோ
அல்லுபகலில்லாத நேரம்பார் ஆடிடுந்தான் சுக்கானில்
பேயைப்பார்
சொல்லரிய சமதானி காற்றைப்பார் துடிக்குமந்தக்
கப்பலுயர் பேயைப்பார்
நல்வழி சீமுடனே மீமுங்கூடி நற்பயணங்கூடி
நிற்குங்கப்பல்பார்.

ஏறடி கப்பலில் பெண்ணாளே—ஜெயம்
ஏகாந்தம் பெறலாமே கண்ணாளே
பாரடி கண்ணடி முன்னாலே—நெஞ்சம்
பதறாமல் யுள்ளத்தில் பூட்டிக்கொள் தன்னாளே. (அ)

மணிதிரண்ட மைதானந் தழகைப்பார் மஹ்பூபா
வெள்ளத்தி லலையுதுபார்
படிகளிட்டு படியுக்குள் நுழையுதுபார் பச்சநிறமுள்ள
புரூ வழைக்குதுபார்
வடிவுநிர்மாகி ரெத்தமாகுதுபார் வட்டமது நாற்பதுநா
ளுருகுதுபார்
துனியமுதல் சத்தமொன்று கேட்குதுபார் தரிக்குமந்தத்
தலத்திற்போய்ச் சேருதுபார்.

கனியைப் பரித்தங்கே தின்னுதே—கை
காலுக ளுற்பத்தியாகுதே
தனியவே யிருந்தங்கே யாடுதே—ரெப்பன்
சட்டப்படியே தவம்விட்டு யேருதே. (அ)

ஏகும்போ திருகையுந்தா னெற்றியின்மேல் என்சா
[illegible]டல்களெல்லா மொடுங்கதுமேல்
பார்வயது ஜென்னத்தின் வாசலுமேல் பகர்கின்ற
முத்தமையறு கூவதுமே
நாடின வழிதிறக்கும் பாதையின்மேல் நலம்பெற வாசல்சாத்
ஸுஜூதுமே
காடுகரை கண்டதெல்லாம் விண்டதுமேல் கன்றுதடி
யிரவுபக லென்றதுமே.

சேருடன் ருலாட்டிப் பாரடி—சிந்தை
சிறந்தகனி யென்று யெண்ணடி
நேருடன் வழிகாட்டி வாரடி—நம்மள்
நெயினர் முஹம்மது சொன்ன மொழியடி. (அ)

மாமரத்தின் தாமரையா முளைப்பதென மதிகெட்டு
வெகுநாளலைவதென
காமந்தான் கலங்கிநின்று முழிப்பதெனக் கமலக்கண்
திறக்குமுன் பிணைவதென
சாமத்தில் விழிதப்பி சேர்வதென சத்துருவாய்
நமக்குபகை யாவதென
காமத்திற் கண்ணில்லை யென்பதெனக் கட்டிவைத்தா
லிருக்காத நாரமென

நேமித்தபடி சேர்ந்து பாரடி—நம்மை
நேராக்கு முத்தனைக் காணடி
தோமித்த முஹம்மது முஹியிதீன்—கனி
சொன்னதை வுள்ளத்தில் அன்னமே வையடி. (அ)

தௌஹீதுப் பதம்

முற்றிற்று.

---

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# முன்னோர்கள் பாடிய பதம்.

—[]—

## பதம்—இராகம் புன்னாகவராளி தாளம் ஆதி.

### பல்லவி.

விதியை மதிதான் வெல்லுமோ, எமன் வராமல்
விணவர் துயிரைக் கொல்லுமோ

### அநுபல்லவி

கதிகொள் சுவர்க்கத்தில் ஆதமுடனே ஹவ்
வாவுங் கோதம்புக் கனியைத் தின்றதும்
பதியி லெடுத்திறை புவியில் விடுத்ததும்
பாடுபடுத்தியே பலனைக் கொடுத்ததும். (விதியை)

### சரணங்கள்

1. ஆபிலைக் காபீல் கொன்றதும், யூனுசை மீன்கொண்
டலைந்து கடலிற் சென்றதும்
நோவால் ஐயூபு நொந்ததும், தையார் சுல்தான்
துடங்கிக் கைகாலிழந்ததும்
வாழ்வின் சுலைமா னரசி ழந்ததும்
மரத்தில் ஸக்கரியா நபியைப் பிளந்ததும்
காவலிபுறுஹீம் நெருப்பில் விழுந்ததும்
கருணை மகன்றனைக் குறுபான் புரிந்ததும் (விதியை)

2. மூஸாதரணியாண்டதும், பிறவுன் வந்து
முரணி வாதாடி நின்றதும்
ஆஸாவாற் படைவென்றதும் அலிபாத் துஷா
அவரை முதலை தின்றதும்
ஈஸாநபி தமக்கைக் காபிரடித்ததும்
யூசுபு நபிதமக்கைக் கிணற்றிலடைத்ததும்
ஓசை தருமஹ்மூது நபிபல்லொன்
றுகுதுப் படைதனில் விழுகப் புடைத்ததும். (விதியை)

3. தமது தந்தையும் உமறு கொன்றதும் தாம்பெற்ற பாலர்
தம்மை யடித்துக்கொன்றதும்

உமறை யும்பயல் குத்திக் கொன்றதும் வலீத்திக்கு மகன்
உதுமானை வெட்டிக் கொன்றதும்

தமது தமயனுர் ஹஸனு மேதண்ணீர்த்
தாகத்தால் நஞ்சைக் குடித் திறந்ததும்

தமது தகப்பனுர் அலியுல்லாவுமே
தறுக னெவலீதுட சொல்லால் மாண்டதும். (விதியை)

4. வம்பன் எஸீ தவன் தன்னுல் வந்தவினைக்கு
வாய்வம் பழக்க வொண்ணு து

நம்புங்கற் பனைதான் வந்தால் அந்தவிதிக்கு
நாமமுஞ் சலிக்கக்கூடாது

முன்பி லிறைவன் லௌகி லெழுதிய
முறைமை தனிலொன் குறைவராதென்று

செம்மல் ஹுஸைனுட செய்தி யனைத்தையுந்
தெளிவ தாகவே யறிவிற் செப்பினுர். (விதியை)

முன்னோர்கள் பாடிய பதம்.

முற்றிற்று.

# இஸ்லாம் மார்க்கப் புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| முஷ்மயித்தீன்மாலை 5-முனாஜாத்து சேர்ந்தது | 0 | 10 | 0 |
| நசீகத்துல் இசுலாம்ஹனுபியா | 0 | 10 | 0 |
| மேற்படி ஷாப்பியா | 0 | 10 | 0 |
| மெஞ்ஞானரத்தின அலங்காரக் கீர்த்தனை | 1 | 0 | 0 |
| திருமுடிபிறக்கிய ஹதீது | 0 | 3 | 0 |
| மரண விலக்கம் மனதை துலக்கம் | 0 | 5 | 0 |
| ராஜமணிமாலை | 1 | 4 | 0 |
| நசிஹத்துநாமா | 0 | 3 | 0 |
| காசிம்படைப்போர் | 0 | 4 | 0 |
| சக்கரூத்து நாமா | 0 | 2 | 0 |
| சத்துருசங்காரம் | 1 | 0 | 0 |
| சையித்தூன் கிஸ்ஸா | 0 | 10 | 0 |
| ஞானமணி மாலை | 0 | 14 | 0 |
| ஷன்மூன்றவியார் கிஸ்ஸா | 0 | 6 | 0 |
| பெண்புத்திமாலை | 0 | 2 | 0 |
| தொழுகை அடவு | 0 | 4 | 0 |
| சலவாத்துப்பாட்டு | 0 | 3 | 0 |
| தொழுகைநாமா | 0 | 3 | 0 |
| இரத்தினமுஹம்மது காரணசரித்திரம் | 0 | 10 | 0 |

இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலைத்தெரு, மதராஸ்.

Q. H. M. S. 320. காபி 2000. (8-11-46)

ஸ்ரீமகள் விலாசம் பிரஸ், ஜி. டி. மதராஸ்.

## புத்தக விளம்பரம்

| வைத்திய புத்தகங்கள் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| மணிமந்திர வைத்திய சேகரம் | 1 | 0 | 0 |
| புலஸ்திய மகாரிஷி வாதசூத்திரம்-300 | 0 | 12 | 0 |
| உரோமரிஷி சூத்திரம்-100 | 0 | 4 | 0 |
| அகஸ்தியமுனி பூரண சூத்திரம்-216 பாடல் | 0 | 8 | 0 |
| பாலவாகடத்திரட்டு வைத்தியம் 1200 பாடல் | 1 | 4 | 0 |
| ஊர்வசி வைத்திய சிட்கா 1-ம் பாகம் | 0 | 12 | 0 |
| ஷை 2-ம் பாகம் | 0 | 12 | 0 |
| தன்வந்திரி கருக்கிடை நிகண்டு-300 | 0 | 8 | 0 |
| ஆயுள்வேத சுருக்கம் | 0 | 12 | 0 |
| திருமூலநாயனார் வைத்தியகாவியம் | 1 | 0 | 0 |
| வைத்திய குறல் பழமொழி விளக்கம்-108 | 0 | 8 | 0 |
| புலஸ்தியர் விளக்கிய ஞானகற்பம் | 0 | 8 | 0 |
| சோதிட புத்தகங்கள் | | | |
| கௌசிக சிந்தாமணி 1-ம் பாகம் | 0 | 14 | 0 |
| ,, ,, 2-ம் பாகம் | 1 | 0 | 0 |
| ,, ,, 3-ம் பாகம் | 1 | 0 | 0 |
| நவக்கிரக சிந்தாமணி என்னும் சாதக சூடாமணி மூலமும்-உரையும் | 0 | 12 | 0 |
| சோதிட நூலாதாரம் | 0 | 6 | 0 |
| சர்வ கினவின் பலன் | 0 | 6 | 0 |
| களவுகாணும் சாஸ்திரம் | 0 | 6 | 0 |
| வீமகவி பாட்டு உரை | 1 | 0 | 0 |
| சுகர்நாடி சோதிடம் | 1 | 0 | 0 |
| சோதிமாமுனிவர் சோதிட கேரளம் | 0 | 12 | 0 |
| சாதகலங்காரம் மூலமும் விரிவுரையுடன் | 2 | 0 | 0 |
| சோதிட முகூர்த்த விதானம் | 0 | 12 | 0 |
| கணித முருகசேகரம் | 1 | 0 | 0 |
| ஹோரா சாஸ்திரம் | 1 | 0 | 0 |
| நவக்கிரக தோத்திரம் | 0 | 6 | 0 |
| மலையாள மாந்திரீக அரிச்சுவடி | 0 | 5 | 0 |

இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலை தெரு, மதராஸ்.